**தேனி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

(25-11-2015 – 29-11-2015)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 24-11-2015

**கடந்த கால வானிலை 20-11-2015 முதல் 23-11-2015 வரை**

| **காரணிகள்** | **கடந்த கால வானிலை** |
|---|---|
| மழை (மி.மீ) | 70.66 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 29-32 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 23-24 |
| மேக மூட்டம் | 6-8 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 70-96 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி) | 5-9 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 29-11-2015 - 8.30 மணி நேரம் வரை**

| **காரணிகள்** | **25.11.15** | **26.11.15** | **27.11.15** | **28.11.15** | **29.11.15** |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 17 | 7 | 4 | 3 | 11 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 28 | 29 | 28 | 27 | 27 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ) | 19 | 18 | 15 | 14 | 17 |
| மேக மூட்டம் | 4 | 3 | 2 | 1 | 4 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 92 | 82 | 85 | 88 | 89 |
| குறைந்த பட்ச ஈரப்பதம்(சதவீதம்) | 61 | 59 | 51 | 47 | 59 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி ) | 9 | 8 | 5 | 7 | 7 |
| காற்றின் திசை | வடகிழக்கு | கிழக்கு வடகிழக்கு | கிழக்கு வடகிழக்கு | தெற்கு தென்மேற்கு | தென்மேற்கு |

**குறுஞ்செய்தி**

- வரும் ஐந்து நாட்களுக்கு லேசான முதல் மிதமான வரை மழை அனைத்து இடங்களிலும் வர வாய்ப்புள்ளது. வானம் ஒரளவு மேகமூட்டத்துடன் குளிர்ந்தும் காணப்படும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள**

**முக்கிய பயிர்கள்: நெல், பருத்தி, கரும்பு மற்றும் காய்கறிகள்**

**பருவம்: நெல்- வளர்ச்சி பருவம், பருத்தி- பூக்கும் பருவம்**

- சொட்டுநிர் பாசனம் மேற்கொள்வதன் மூலம் நீர்த்தேவைகளைக் குறைக்கலாம்.
- அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதால் விவசாயிகள் தங்களுடைய நெற்பயிர்களுக்கு பூச்சி மருந்தை அடிப்பதை தவிர்க்குமாறும் மற்றும் உரமாடுதல் தள்ளிபோடுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.
- கரும்பு இரும்புச்சத்து பற்றாக்குறை நிவர்த்தி செய்ய 250 கிராம் பெர்ரஸ் சல்பேட் 100 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கலாம் அல்லது எக்கருக்கு 25 கிராம் பெர்ரஸ் சல்பேட் மண்வழி இடலாம்.
- மக்காச்சோளத்தில் அடி சாம்பல் நோயினைக் கட்டுப்படுத்த Metalaxyl+Mancozeb @ 100g/ha ஆகியவற்றை விதைத்த 20 நாளில் தெளிக்கவும்.
- மழை நீர் சூழ்ந்துள்ள வயல்களில் உடனடியாக வடிகால் வசதி ஏற்படுத்தி நீரினை வடித்து வேர்பகுதிக்கு காற்றொட்டம் கிடைக்கச் செய்யவும்.